சுருக்கம்

பள்ளிக் கல்வி - கல்வி தரம் மேம்பாடு மற்றும் பள்ளிகள் செயல்பாடு ஆகியவற்றை திறம்பட கண்காணிக்க கள அளவில் உள்ள அலுவலர்களுக்கு அதிகாரமளித்து, நிர்வாக அமைப்பில் மறு கட்டமைவினை கொண்டு வருதல் - ஆணைகள் - வெளியிடுதல்

பள்ளிக் கல்வி (வரவு-செலவுத் திட்டம்-1) துறை

அ.ஆ.(நிலை) எண்.101

நாள்:18.05.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி - வைகாசி-4

படிக்கப்பட்டவை

1. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.84056/அ1/எஸ்1/2017 நாள்:18.01.2018 & 26.03.2018.
2. தொடக்கக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.02469011/2018 &ந.க.எண்.05675/A1/2018 நாள்:23.03.2018.
3. மெட்ரிக்குலேசன் பள்ளி இயக்குநரின் ந.க.எண்.1440/அ1/2018 நாள்: 22.03.2018.

**ஆணை:**

1. கள அளவில் அதாவது முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள் ஆய்வாளர், மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஆய்வாளர் மற்றும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அளவில் அதிகாரங்கள் அளித்து, கள அளவில் உள்ள நிர்வாக அமைப்பில் மறு கட்டமைவினை ஏற்படுத்துவதின் சார்பில் கருத்துருக்கள், மேற்காண் பார்வைகளில் உள்ளவாறு பள்ளிக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் மெட்ரிக்குலேசன் பள்ளி இயக்குநர் ஆகியோர் சமர்ப்பித்திருந்தனர்.

2. மாநில அளவில் 37,211 அரசுப் பள்ளிகளும், 8,403 நிதியுதவி பள்ளிகளும் 12,419 சுயநிதி பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளின் ஒழுங்கு மற்றும் ஆய்வு மேம்பாட்டினை மேற்கொள்வதற்காக களஅளவில் ஒத்திசைவு கொண்ட வெவ்வெறு நிர்வாக அமைப்புகள் உள்ளன. அரசு / நிதியுதவி / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை கள அளவில் நிர்வாகம் மேற்கொள்வதற்காக மாவட்டதத்திற்கு ஒரு அலுவலர் என்னும் வீதத்தில் 32 முதன்மைக் கல்வி அலுவலர்களும், கல்வி மாவட்டத்திற்கு ஒரு அலுவலர் எனும் வீதத்தில் 67 மாவட்டக் கல்வி அலுவலர்களும் உள்ளனர். அரசு / நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை கள அளவில் நிர்வாகம் மேற்கொள்வதற்காக, வருவாய் மாவட்டத்திற்கு ஒரு அலுவலர் என்னும் வீதத்தில் 32 மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் உள்ளனர். குறைந்த பட்சம் இரண்டு வருவாய் மாவட்டங்கள் என்னும் வீதத்தில் மாநிலத்தில் உள்ள 4,322 மெட்ரிக்குலேசன் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் பணியை மேற்கொள்வதற்காக 17

மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஆய்வாளர்கள் உள்ளனர். மாநிலம் முழுவதும் உள்ள ஆங்கிலோ - இந்தியன் பள்ளிகள் செயல்பாடுகளை மேலாண்மை மேற்கொள்வதற்காக ஆங்கிலோ-இந்தியன் பள்ளி ஆய்வாளர் ஒருவர் உள்ளார். முதன்மைக் கல்வி அலுவலர் நீங்கலாக மீதமுள்ள பணியிடங்கள் யாவும் ஒரே நில எல்லையில் உள்ள வெவ்வேறு வகையான பள்ளிகளை ஆய்வு செய்வதற்காக உள்ள ஒரே தகுதி நிலை கொண்ட பணியிடங்களாகும். இவ்வாறாக, ஒரு குறிப்பிட்ட எல்லையில் அமைந்துள்ள மழலையர், பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், அரசு நிதியுதவி தனியார் பள்ளிகள் மற்றும் சுயநிதி பள்ளிகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், ஆய்வு செய்வதற்காகவும், வெவ்வேறு அதிகார அமைப்புகள் உள்ளன. இவ்வதிகார அமைப்புகள் ஒரே நில எல்லைக்குட்பட்ட வெவ்வேறு வகை பள்ளிகளின் மீது செயலாக்கம் புரிகின்றன. இதனால் ஆய்வு மற்றும் மேற்பார்வை செயல்பாடுகளில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதுடன், பல மேலாண்மை பணிகள் உரிய பலனைத் தராமல் விரயமாகின்றன. மேலும், இதனால் பள்ளிகளது ஆய்வு தரம் கூட குறைகிறது. இந்நிலையில் புற்றீசல் போன்று வளர்ச்சி பெற்று வரும் அங்கீகாரமற்ற பள்ளிகளை அருகில் இருந்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, தற்போதைய நிர்வாக அமைப்பினை மறுகட்டமைவு செய்து கீழ்நிலை / கள அளவு அலுவலர்களுக்கு கூடுதல் அதிகாரங்களை அளித்து, அதன் மூலம் பள்ளிகள் மீதான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் கருத்துருக்களை தயாரித்து இயக்குநர்கள் பார்வையில் உள்ளவாறு சமர்ப்பித்துள்ளனர்.

3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி பணி விதிகளுக்குட்பட்ட 2,910 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி பணிவிதிகளுக்குட்பட்ட 2,913 மேல்நிலைக் பள்ளி தலைமை ஆசிரியர்கள் பணியிடங்கள் சார்பில் நியமன மற்றும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் உள்ளது. தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலை பணிக்குட்பட்ட 836 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் சார்பிலான நியமன அதிகாரம் தொடக்கக் கல்வி இயக்குநரிடம் உள்ளது. இணை இயக்குநர் (மேநிக) அவர்களிடம் தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி பணி விதிகளுக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 23,815 முதுகலை ஆசிரியர்கள் (மொழி மற்றும் பாட ஆசிரியர்கள்) மற்றும் 344 உடற்கல்வி இயக்குநர்கள் பணியிடங்கள் சார்பில் நியமன மற்றும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளது. தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலை பணிக்குட்பட்ட பள்ளித் துணை ஆய்வாளர்கள், பள்ளி உதவி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் மற்றும் சிறுபான்மை மொழி ஆசிரியர்கள் என உள்ள 61,451 பணியிடங்கள், உடற்கல்வி இயக்குநர்கள் நிலை-1-ல் உள்ள 120 பணியிடங்கள், சுருக்கெழுத்து-தட்டச்சர் நிலை-2 மற்றும் 2,512 உதவியாளர்கள் சார்பில் நியமனம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களிடம் உள்ளது. தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலை பணியில் தற்காலிக விதிகளுக்குட்பட்ட 1,981 தொழிற்கல்வி பயிற்றுநர்களின்

நியமன அலுவலராக இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்கள் உள்ளார். ஏற்கனவே, அதிக பணிப்பளுவுடன் செயலாற்றி வரும் இயக்குநர்களுடன் சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் மூலம், மாநிலத்தில் கல்வித் துறையில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களையும், ஊழியர்களையும் மேலாண்மை செய்தல் என்பது சிரமமானதாக மட்டுமின்றி, இயலாத ஒன்றாகவும் உள்ளது. எனவே நிர்வாக மற்றும் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரங்கள் கீழ்நிலை / கள நிலை அலுவலர்களுக்கு அளித்து அதன் மூலம் கல்வித் துறை மேம்பாட்டினை கொண்டு வருவதற்கான அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

4. பள்ளிகள் கண்காணிப்பு மற்றும் தரமான கல்வி ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில், அரசு விரிவான பரிசீலனைக்குப் பிறகு, நிர்வாக மறு கட்டமைவின் மூலம் கீழ்நிலை / கள நிலை அலுவலர்களுக்கு நிர்வாகம் மற்றும ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் அதிகாரங்களை அளித்து கீழ்க்கண்டவாறு ஆணைகளை பிறப்பிக்கின்றது.

### i) முதன்மைக் கல்வி அலுவலர்கள் :

வருவாய் மாவட்ட அளவில் அமைந்துள்ள அனைத்து வகை பள்ளிகளையும் (அதாவது, பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் மழலையர், சுயநிதி பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து வகை தனியார் பள்ளிகள்) நிர்வகிக்கும் அதிகாரம் முதன்மைக் கல்வி அலுவலர்களைச் சார்ந்தது ஆகும்.

### ii) மாவட்டக் கல்வி அலுவலர்கள்:

மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஆய்வாளர்கள் மற்றும் ஆங்கிலோ - இந்தியன் பள்ளிகள் ஆய்வாளர் பணியிடங்கள் யாவும் ஒரே காலமுறை ஊதியத்தில் உள்ள சமதகுதிக் கொண்ட பணியிடங்கள் ஆகும். இனி, இப்பணியிடங்கள் யாவும் **"மாவட்டக் கல்வி அலுவலர்"** என்று ஒரே பெயரால் அழைக்கப்படும். ஒவ்வொரு மாவட்ட கல்வி அலுவலரும் ஏறக்குறைய ஒரே எண்ணிக்கை கொண்ட வகையில் பள்ளிகளை பெறும் வகையில் அவர்களது அதிகார நில எல்லை பகுக்கப்படும். அவ்வாறு அதிகார நில எல்லை மாற்றியமைக்கின்ற பொழுது ஒன்றியம் அல்லது வார்டு என்பது பிரிக்கபடாமல் ஒரே அலகாக இருப்பதை உறுதி செய்யப்படும். இவ்வாறு ஏற்படுத்தப்படும் கல்வி மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளை (அதாவது பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் மழலையர், சுயநிதி பள்ளிகள்) நிர்வகிக்கும் அதிகாரம் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு அளிக்கப்படுகிறது.

**iii) வட்டாரக் கல்வி அலுவலர்கள்:**

தமது அதிகார நில எல்லைக்குட்பட்ட அதாவது வட்டார அளவில் உள்ள அனைத்து வகை தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளை ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்யும் அதிகாரம் அளிக்கப்படுவதால் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் இனி **"வட்டாரக் கல்வி அலுவலர்கள்"** என பெயர் மாற்றம் செய்து அழைக்கப்படுவர். வட்டாரக் கல்வி அலுவலர்கள் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், அரசு நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் சுயநிதி பள்ளிகளை மேற்பார்வையிடுவர். அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து வகை பள்ளிகளையும் பார்வையிடும் அதிகாரம் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஏறக்குறைய ஒரே எண்ணிக்கையில் ஒவ்வொரு வட்டாரக் கல்வி அலுவலரும் பள்ளிகளை பெறும் வகையில் அவர்களுடைய ஒன்றியம் / வார்டு அளவிலான நில எல்லை நிர்ணயிக்க வேண்டும்.

iv) மாநிலம் முழுவதும் உள்ள கல்வித் துறையில் பணியாற்றும் அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் மீதும் ஏற்கனவே அதிக பணிப்பளுவுடன் இருக்கும் இயக்ககங்களால் மேலாய்வு மேற்கொள்ளுதலும், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரங்களை செயல்படுத்துவதும் சிரமமானது மட்டுமின்றி இயலாத ஒன்றாகவும் உள்ளது என அறியப்படுகிறது. எனவே நிர்வாகத்தை அதிக பலன் தரும் வகையில் திறம்பட செயல்படுவதற்கு ஏதுவாக பிற்சேர்க்கை I, II, மற்றும் III-ல் உள்ளவாறு முதன்மைக் கல்வி அலுவர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நிர்வாக அதிகாரங்கள் அளிக்கப்படுகின்றன.

5. பகுதி 4-ல் உள்ள ஆணைகள் யாவும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிறப்பிக்கப்படுகின்றன.

அ) கூடுதலாக நிதி செலிவனம் மேற்கொள்ளுதல் கூடாது.

ஆ) புதிய பணியிடங்கள் / ஊதிய கட்டு மாற்றம் / அலுவலகக் கட்டடம் மற்றும் உபகரணங்கள் ஏதும் கோருதல் கூடாது. எனவே, பள்ளிகளில் உபரியாக உள்ள அறைகளில் புதிய அலுவலகங்கள் அமைத்துக்கொள்ள வேண்டும்.

இ) சிலப் பணியிடங்களின் பெயர் மாற்றம் என்பது யாதொரு நிதி பயன்பாடு இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. சம்பந்தப்பட்ட சிறப்பு விதிகளில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு தேவையான கருத்துருக்களை தனித்தனியாக சமர்ப்பிக்க பள்ளிக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

7. U.O.No.26404/கல்வி-II/2018-1 நாள்: 17.05.2018-ன்படி நிதித்துறை இசைவு பெற்று இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநர் ஆணையின்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலர்

பெறுதல்:
1. பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
2. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
3. மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.
4. அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
5. தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம்,சென்னை-6.
6. செயலர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,சென்னை-6.
7. மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்கம்,சென்னை-6.
8. திட்ட இயக்குநர்,அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம், சென்னை-6.
9. பொது நூலக இயக்குநர், சென்னை-6.
10. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,சென்னை-6.
11. இயக்குநர்,முறைசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம்,சென்னை-6.
12. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35/79/5
13. மாநில கணக்காயர், சென்னை-18.

நகல்:
1. நிதி (கல்வி-II) துறை, சென்னை-9.
2. பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை,சென்னை-9.
3. மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின் தனி உதவியாளர்,சென்னை-9.
4. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தனி உதவியாளர், சென்னை-9.
5. மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,சென்னை-9.
6. அரசு முதன்மைச் செயலரின் முதுநிலை முதன்மை தனி செயலர், பள்ளிக் கல்வித் துறை,சென்னை-9.
7. அனைத்து அலுவலர்கள், அனைத்து பிரிவுகள் / பள்ளிக் கல்வித் துறை,சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

அரசு ஆணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வி (வரவு-செலவு திட்டம்-1) துறை நாள்:18.05.2018-ன் பிற்சேர்க்கை-I

முதன்மைக் கல்வி அலுவலர்களது கடமைகள் மற்றும் பொறுப்புகள்:

**1. ஆய்வு அதிகாரம்:**

அ) வருவாய் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை பள்ளிகளை பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

ஆ) மாநில மற்றும் மைய அரசாங்களால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி ஆசிரியர்களின் கல்வித் தகுதிகள் மற்றும் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ல், முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள மாணவரின் பாதுகாப்பு அம்சங்கள் உள்ளிட்டவற்றை வருவாய் மாவட்டத்திலுள்ள பிற பாடத்திட்டங்கள் (CBSE, ICSE, IB, AB முதலியன) கீழ் இயங்கும் பள்ளிகளில் ஆய்வு செய்தல்.

இ) அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் அவ்வப்பொழுது மத்திய மற்றும் மாநில அரசால் நிர்ணயிக்கப்படும் விதிகளுக்கு மாறாக இயங்கும் பள்ளிகளின் மீது நடவடிக்கை மேற்கொண்டிட பரிந்துரைத்தல்.

ஈ) சிறுபான்மை பள்ளிகள் நீங்கலாக உள்ள தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை சுயநிதிப் பள்ளிகளில் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ன்படி, பிற்படுத்தப்பட்ட, நலிவுற்ற குறைந்த வருவாய் கொண்ட பெற்றோர்களது குழந்தைகளுக்கான 25% சேர்க்கை சம்பந்தமான செயலாக்கத்தை ஆய்வு செய்தல்.

உ) தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணய குழுவின் பரிந்துரைப்படி மாணவர்களிடம் கட்டணம் வசூலிப்பதை உறுதி செய்தல்.

ஊ) அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ன்படி, சுயநிதி பள்ளிகளில் காணப்படும் விதி மீறல்கள் ஏதேனும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் மூலம் கவனத்திற்கு கொண்டு வரும்பொழுது, அவற்றின் சார்பில் மேல்முறையீட்டு அலுவலராக பணியாற்றுதல்.

எ) வருவாய் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பள்ளிகளில் ஆண்டாய்வு மேற்கொள்ளுதல்.

ஏ) மாவட்டக் கல்வி அலுவலகங்களில் ஆண்டாய்வு மேற்கொள்ளுதல்.

ஐ) வருவாய் கல்வி மாவட்டத்திலுள்ள அனைத்து வகை பள்ளிகளிலும் அரசு நலத்திட்ட செயல்பாடுகளை ஆய்வு செய்தல்.

2. பள்ளிகள் தொடங்குதல் / மூடுதல் மற்றும் அங்கீகாரம் அளித்தல் உள்ளிட்ட அதிகாரங்கள்:

i) அரசுப் பள்ளிகள்:

அ) புதிய தொடக்கப் பள்ளிகளை தொடங்குதல் மற்றும் பள்ளிகளை தரம் உயர்த்துதல் சார்பில் மாவட்ட கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் கருத்துருக்களை பரிசீலித்து, ஆய்வு செய்து, அதற்குரிய இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைத்தல்.

ஆ) பொது மக்கள் பாதிப்பின்றி, அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளை இணைப்பது சம்பந்தமான மாவட்டக் கல்வி அலுவலர்களின் அறிக்கைகளின் மீது இறுதி ஆணைகளை பிறப்பித்தல்.

ii) நிதியுதவி தனியார் பள்ளிகள்:

இ) அரசு நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளது அங்கீகார புதுப்பித்தலுக்கு ஆணை வழங்குதல்.

ஈ) அரசு நிதியுதவி தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை மூடுதல் சார்பில் மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டால் அவற்றின் உண்மைத்தன்மையை ஆய்வு செய்து உரிய குறிப்புகளுடன் சம்பந்தப்பட்ட இயக்குநருக்கு பரிந்துரைத்தல்.

iii) சுயநிதிப் பள்ளிகள்:

உ) புதிய சுயநிதி மழலையர், தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளை தொடங்குதல் மற்றும் அங்கீகாரம் அளித்தல் சார்பிலான விண்ணப்பங்களையும் நடுநிலை, உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை தரம் உயர்த்துதல் சார்பிலான விண்ணப்பங்களையும் சம்பந்தப்பட்ட இயக்குநர்களுக்கு பரிந்துரைத்தல்.

ஊ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அங்கீகாரத்தை புதுப்பித்து ஆணை வழங்குதல்.

எ) சுயநிதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பிரிவுகள் தொடங்க அனுமதி வழங்குதல்.

ஏ) பொது மக்கள் பாதிப்பின்றி சுயநிதி பள்ளிகள் மூடுதல் சார்பில் பெறப்படும் கருத்துருக்களை சம்பந்தப்பட்ட இயக்குநருக்கு பரிநதுரைத்தல்.

ஐ) அனைத்து பள்ளிகளும் அரசு அங்கீகாரத்துடன் செயல்படுவதை உறுதி செய்தல்.

3. பணி சார்பிலானவை:
i) நியமன அதிகாரம்:
கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலர் நியமன அலுவலராக செயல்படுவார்.
அ) தமிழ்நாடு பள்ளிக் கல்வி பணித்தொகுதிக்குட்பட்ட உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் அதற்கிணையான பணியிடங்கள்.

ஆ) தமிழ்நாடு மேல்நிலை கல்வி பணிக்கு உட்பட்ட முதுகலை ஆசிரியர்கள் (மொழி மற்றும் பாடங்கள்) மற்றும் உடற்கல்வி இயக்குநர்கள் பணியிடங்கள்.

இ) தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலை பணிக்குட்பட்ட பள்ளித் துணை ஆய்வாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், இளநிலை பள்ளி துணை ஆய்வாளர்கள், பட்டதாரி தமிழாசிரியர்கள், பண்டிட் மற்றும் முன்சீகள் (Munshis) (சிறுபான்மை மொழி ஆசிரியர்கள்), உடற்கல்வி இயக்குநர்கள் (நிலை-1) பணியிடங்கள்.

ஈ) கன்னியாகுமாரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் உள்ள தமிழ் நீங்கலான பண்டிட்கள் அராபிக் முன்சீஸ் உள்ளிட்ட முன்சிகள் பணியிடங்கள், நிலை-II, இடைநிலை ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள் நிலை-I, மற்றும் நிலை-II, கலையாசிரியாகள், இசையாசிரியர்கள், தையல் ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், தொழில் கல்வி பயிற்றுநர்கள் போன்ற பணியிடங்கள்.

உ) தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலை பணிக்குட்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்கள்.

ஊ) தமிழ்நாடு அமைச்சுப் பணிக்குட்பட்ட சுருக்கெழுத்து-தட்டச்சர்கள், தட்டச்சர்கள், மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்கள்.

**ii) ஒழுங்கு நடவடிக்கை அதிகாரம்:**

தாம் நியமன அலுவலராக உள்ள அனைத்து பணியிடங்களிலும் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முயைீடு) விதிகள், 1973-க்குட்பட்ட விதிகள் 17 (அ) மற்றும் 17 (ஆ) கீழ் ஒழுங்கு நடவடிக்கை செயல்பாடுகளை தொடங்குதல், அவற்றின் மீதான இறுதி ஆணைகளை பிறப்பித்தல்.

**iii) நிதியுதவி பள்ளிகள்:**

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளது நிர்வாகம் அல்லது அவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து பெறப்படும் மேல்முறையீட்டு மனுக்களை பரிசீலித்து உதவிய ஆணைகளை வழங்குதல். நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளது செயலாளர் அல்லது தாளாளரால் விதிக்கப்படும் தண்டனைகள் உண்மையாக இருப்பின் அவற்றிக்கு அனுமதி அளித்தல்.

**iv) நிதியுதவி பள்ளிகளில் பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம்:**

நிதியுதவி உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கான முன் அனுமதியை வழங்குதல் மற்றும் அப்பணியிடங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்.

v) பணிப்பதிவேடு:

மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் பணியாளர்களின் சார்பில் பணிப்பதிவேடுகளை தொடங்கி பராமரித்தல்.

**vi) தகுதிகாண் பருவம்:**

**அ) அரசுப் பள்ளிகள்:**

அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் உள்ளிட்ட தாம் நியமன அதிகாரம் கொண்ட அனைத்து பணியிடங்களில் பணியாற்றுவோருக்கு தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை பிறப்பித்தல்.

**ஆ) நிதியுதவி பள்ளிகள்:**

நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயலாளர் / தாளாளர்கள் மூலம் ஆசிரியர்களுக்கும், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு பிறப்பிக்கப்படும் தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணைகளுக்கு ஒப்புதல் அளித்தல்.

**vii) தேர்வுநிலை / சிறப்புநிலை அளித்தல்:**

அரசு உயர் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலக பணியாளர்களுக்கு தேர்வு நிலை / சிறப்பு நிலை அளித்தல்.

viii) விடுப்பு அனுமதி:

மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும், முதன்மைக் கல்வி அலுவலக பணியாளர்களுக்கும் விடுப்பு அனுமதித்தல்.

**ix) கூடுதல் கல்வித் தகுதிகளை பெற முன் அனுமதி வழங்குதல்:**

அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் தாம் நியமன அலுவலராக உள்ள பிறத் தொகுதி பணியாளர்களுக்கு கூடுதல் கல்வித் தகுதியை பெறுவதற்கான முன் அனுமதி வழங்குதல்.

**x) பணியாளர் நிர்ணயம்:**

நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாளர் நிர்ணயத்திற்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் ஆசிரியர் / பணியாளருடன் அல்லது ஆசிரியர் / பணியாளர் இன்றி உள்ள கூடுதல் பணியிடங்களை சரண் செய்ய சம்பந்தப்பட்ட இயக்குநர்களுக்கு கருத்துருக்களை அனுப்பிவைத்தல்.

xi) ஊதியம் மற்றும் இதர பலன்களை பெற்று வழங்குதல்:

முதன்மைக் கல்வி அலுவலக பணியாளர்களுக்கு ஊதியம், கடன் மற்றும் முன் தொகை ஒப்பளிப்புகள் மற்றும் பொது வைப்பு நிதி தற்காலிக மற்றும் பகுதி இறுதி எடுப்பு ஆகியவற்றைக்கு ஒப்புதல் அளித்து, பெற்று வழங்குதல். மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு கடன் மற்றும் முன் தொகை ஒப்பளிப்புகள், பொதுவைப்பு நிதி தற்காலிக முன்பணம் மற்றும் பகுதி இறுதி எடுப்பு ஆகியவற்றை அனுமதித்து பெற்று வழங்குதல்.

சுயநிதி பள்ளிகள்:

வருவாய் மாவட்டத்திலுள்ள அனைத்து சுயநிதி பள்ளிகளிலும் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தால் அனைத்து ஆசிரியர்களுக்கும் மின்னணு மாற்று மூலம் ஊதியம் பெற்று வழங்கப்படுதலை உறுதி செய்தல் மற்றும் விதி மீறல்கள் ஏதேனும் இருப்பின் அந்நிர்வாகங்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல். இப்பொருள் சார்பில் மாவட்டக் கல்வி அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு மேல்முறையீட்டு அலுவலராக செயல்படுதல்.

xii) ஆண்டு மந்தன அறிக்கை:

மாவட்டக் கல்வி அலுவலர்களால் எழுதப்படும் ஆண்டு மந்தன அறிக்கையை மீளாய்வு செய்தல் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் மீது ஆண்டு மந்தன அறிக்கை தயாரித்தல்.

xiii) பதவி உயர்விற்கான தேர்ந்தோர் பட்டியல் தயாரித்தல்:

வருவாய் மாவட்ட அளவில் சுருக்கெழுத்து-தட்டச்சர்கள், மற்றும் இளநிலை உதவியாளர்கள் சார்பில் பதவி உயர்விற்கான தேர்ந்தோர் பட்டியல் தயாரித்தல்.

xiv) ஆசிரியர் மற்றும் ஆசிரியல்லாத பணியாளர்களை பணியிட மாற்றம் செய்தல்:

நிர்வாக நலன் அல்லது பிற காரணங்களின் அடிப்படையில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களை வருவாய் மாவட்டத்திற்குள் பணியிட மாற்றம் செய்தல்.

xv) ஓய்வூதிய பலன்கள்:

மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலக பணியாளர்கள் சார்பில் ஓய்வூதிய கருத்துருக்களை மாநில கணக்காயருக்கு அனுப்பி வைத்தல்.

4) வரவு - செலவுத் திட்டம்:

மாவட்டக் கல்வி அலுவலர்களின் ஒத்துழைப்புடன் வருவாய் மாவட்ட அளவில் அனைத்து பணித் தொகுதிக்கான எண் பட்டியல், உத்தேச வரவு-செலவு திட்டம் ஆகியவற்றை தொகுத்தல் மற்றும் கருவூல துறையுடன் வரவு-செலவு கணக்குகளை ஒத்திசைவு செய்தல்.

**தனியார் பள்ளிகள்:**

நிதியுதவி தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளது எண் பட்டியல் மற்றும் உத்தேச வரவு-செலவு திட்டம் ஆகியவற்றை தொகுத்தல்.

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலர்

/ உண்மை நகல் /

(ஒம்) xxxxxxx
பிரிவு அலுவலர்

அரசு ஆணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வி (வரவு-செலவு திட்டம்-1) துறை நாள்:18.05.2018-ன் பிற்சேர்க்கை-II

**மாவட்டக் கல்வி அலுவலரின் கடமைகளும், பொறுப்புகளும்:**

**1. ஆய்வு அதிகாரம்:**

அ) கல்வி மாவட்டத்திலுள்ள அனைத்து வகை பள்ளிகளையும் பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செயதல்.

ஆ) மாநில மற்றும் மைய அரசாங்களால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி ஆசிரியர்களின் கல்வித் தகுதிகள் மற்றும் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ல், முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள மாவணவர்களின் பாதுகாப்பு அம்சங்கள் உள்ளிட்டவற்றை கல்வி மாவட்டத்திலுள்ள பிற பாடத்திட்டங்கள் (CBSE, ICSE, IB, AB முதலியன) கீழ் இயங்கும் பள்ளிகளில் ஆய்வு செய்தல் மற்றும் அது சம்பந்தமான அறிக்கை முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பிவைத்தல்.

இ) அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் அவ்வப்பொழுது மத்திய மற்றும் மாநில அரசால் நிர்ணயிக்கப்படும் விதிகளுக்கு மாறாக இயங்கும் பள்ளிகளின் மீது நடவடிக்கை மேற்கொள்ள அறிக்கை தயாரித்து முதன்மைக் கல்வி அலுவருக்கு பரிந்துரை செய்து அனுப்பிவைத்தல்.

ஈ) சிறுபான்மை பள்ளிகள் நீங்கலாக உள்ள தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளில் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ன்படி, பிற்படுத்தப்பட்ட, நலிவுற்ற, குறைந்த வருவாய் கொண்ட பெற்றோர்களது குழந்தைகளுக்கான 25% சேர்க்கை சம்பந்தமான செயலாக்கத்தை ஆய்வு செய்தல்.

உ) கல்வி மாவட்ட அளவில் உள்ள அனைத்து சுயநிதி பள்ளிகளிலும் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணய குழுவின் பரிந்துரைப்படி மாணவரிடம் கட்டணம் வசூலிப்பதை உறுதி செய்தல்.

ஊ) கல்வி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பள்ளிகளில் ஆண்டாய்வு மேற்கொள்ளுதல்.

எ) வட்டாரக் கல்வி அலுவலகங்களில் ஆண்டாய்வு மேற்கொள்ளுதல்.

ஏ) கல்வி மாவட்ட அளவில் உள்ள அனைத்து வகை பள்ளிகளிலும் அரசு நலத்திட்ட செயல்பாடுகளை ஆய்வு செய்தல்.

2. பள்ளிகள் தொடங்குதல் / மூடுதல் மற்றும் அங்கீகாரம் அளித்தல் உள்ளிட்ட அதிகாரங்கள்:

i) அரசுப் பள்ளிகள்:

அ) புதிய தொடக்கப் பள்ளிகளை தொடங்குதல் மற்றும் பள்ளிகளை தரம் உயர்த்துதல் சார்பில் கருத்துருக்கள் தயாரித்து முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பி வைத்தல்.

ஆ) பொது மக்கள் பாதிப்பின்றி அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் இணைப்பது சம்பந்தமான கருத்துருக்களை முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பிவைத்தல்.

ii) நிதியுதவி தனியார் பள்ளிகள்:

இ) அரசு நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளது அங்கீகார புதுப்பித்தலுக்கு ஆணை வழங்குதல்.

அ) அரசு நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை சார்பில் அங்கீகாரத்தை புதுப்பித்தலுக்கான கருத்துருக்களை முதன்மைக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைதல்.

ஆ) அரசு நிதியுதவி தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை மூடுதல் சார்பில் கருத்துருக்களை உரியக் குறிப்புகளுடன் முதன்மைக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைத்தல்.

iii) சுயநிதிப் பள்ளிகள்:

இ) வட்டாரக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் புதிய சுயநிதி மழலையர், தொடக்க பள்ளிகள் சார்பிலான கருத்துருக்களையும், நடுநிலைப் பள்ளிகள் தரம் உயர்த்துதல் சார்பிலான கருத்துருக்களையும் உரிய குறிப்புகளுடன் முதன்மைக் கல்வி அலுவலருக்கு பரிந்துரை செய்தல்.

ஈ) புதிய சுயநிதி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்குதல் மற்றும் அங்கீகாரம் புதுப்பித்தல் சார்பில் பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து முதன்மைக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைத்து அனுப்பி வைத்தல்.

உ) சுயநிதி மழலையர், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு அங்கீகாரத்தை புதுப்பித்து ஆணை வழங்குதல்.

ஊ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளது சார்பில் பெறப்படும் அங்கீகாரம் புதுப்பித்தல் சம்பந்தமான விண்ணப்பங்களை முதன்மைக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைத்தல்.

எ) தொடக்க மற்றும் நடுநிலை சுயநிதி பள்ளிகளில் கூடுதல் பிரிவுகள் தொடங்க அனுமதி அளித்தல்.

ஏ) உயர்நிலை மற்றும் மேல்நிலை சுயநிதி பள்ளிகளில் கூடுதல் பிரிவுகளை தொடங்க பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து முதன்மைக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைத்தல்.

ஐ) சுயநிதி பள்ளிகளை மூடுதல் சார்பில் வட்டாரக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்படும் கருத்துருக்களை உரிய குறிப்புகளுடன் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பி வைத்தல்.

ஒ) அனைத்து பள்ளிகளும் அரசு அங்கீகாரத்துடன் செயல்படுவதை உறுதி செய்தல்.

**3. பணி சார்பிலானவை:**

**i) நியமன அதிகாரம்:**

**கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர் நியமன அலுவலராக செயல்படுவார்.**

அ) தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலை பணிக்கு உட்பட்ட தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், முன்-தொழிற்கல்வி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் போன்ற பணியிடங்கள்.

ஆ) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிக்குட்பட்ட ஓட்டுனர்கள், அலுவலக உடனாள்கள், பதிவறை உதவியாளர்கள் மற்றும் பதிவறை எழுத்தர்கள் போன்ற பணியிடங்கள்.

இ) தமிழ்நாடு அடிப்படைப் பணிக்குட்பட்ட அலுவலக உதவியாளர்கள் மற்றும் இரவுக் காவலர்கள் போன்ற பணியிடங்கள்.

**ii) ஒழுங்கு நடவடிக்கை அதிகாரம்:**

தாம் நியமன அலுவலராக உள்ள அனைத்து பணியிடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1973-க்குட்பட்ட விதிகள், 17 (அ) மற்றும் 17 (ஆ) கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் இறுதி ஆணை பறப்பித்தல்.

**நிதியுதவி பள்ளிகள்:**

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலிருந்து நிர்வாகத்தின் மூலமாகவோ, ஆசிரியர் மூலமாகவோ பெறப்படும் மேல்முறையீடு மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் செயலாளர் / தாளாளரால விதிக்கப்பட்ட தண்டனைகளுக்கு உண்மைத்தன்மை அடிப்படையில் அனுமதி ஒப்பளித்தல்.

**iii) நிதியுதவி பள்ளிகளில் பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரம்:**

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கான முன் அனுமதியை வழங்குதல் மற்றும் அப்பணியிடங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்.

**iv) பணிப்பதிவேடு:**

உயர்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் இவ்விரண்டிற்கும் இணையான பணியிடங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலக பணியாளர்கள் சார்பில் பணிப்பதிவேடுகளை தொடங்கி பராமரித்தல்.

**நிதியுதவி பள்ளிகள்:**

நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பராமரிக்கப்படும் ஆசிரியர் மற்றும் ஆசிரியல்லாதோர் பணிப்பதிவேடுகளில் பணி விவரங்கள் சார்பிலான பதிவுகளுக்கு மேலொப்பம் இடுதல்.

**v) தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடுதல்:**

தாம் நியமன அலுவலராக உள்ள பணியிடங்களில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் சார்பில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணையிடுதல்.

**நிதியுதவி தனியார் பள்ளிகள்:**

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் சார்பில் செயலாளர் மற்றும் தாளாளரால் பிறப்பிக்கப்படும் தகுதிகாண் பருவம் முடித்தல் ஆணைக்கு ஒப்புதல் வழங்குதல்.

**vi) தேர்வுநிலை / சிறப்புநிலை அளித்தல்:**

தாம் நியமன அலுவலராக உள்ள பணியிடங்களில் பணியாற்றுவோருக்கு தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை அனுமதித்து ஆணையிடுதல்.

**நிதியுதவி பள்ளிகள்:**

நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும ஆசிரியரல்லாத பணியாளர்கள் சார்பில் செயலாளர் அல்லது தாளாளரால் பிறப்பிக்கப்படும் தேர்வுநிலை / சிறப்புநிலை ஆணைகளுக்கு ஒப்புதல் வழங்குதல்.

vii) விடுப்பு அனுமதி:

மாவட்டக் கல்வி அலுவலக பணியாளர்கள், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் அதற்கிணையான பணியிடங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு உரிய விடுப்பு அனுமதி வழங்குதல்.

நிதியுதவிப் பள்ளிகள்:

நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் சார்பில் செயலாளர் அல்லது தாளாளர்களால் அனுமதிக்கப்படும் விடுப்பிற்கு ஒப்புதல் வழங்குதல்.

viii) கூடுதல் கல்வித் தகுதிகளை பெற முன் அனுமதி வழங்குதல்:

தாம் நியமன அலுவலராக உள்ள பணியிடங்களில் பணியாற்றும் அனைத்து வகை பணியாளர்களுக்கும், கூடுதல் கல்வித் தகுதியை பெறுவதற்கான முன் அனுமதியை வழங்குதல்.

நிதியுதவி பள்ளிகள்:

நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும ஆசிரியரல்லாதோர் சார்பில் கூடுதல் கல்வித் தகுதியை பெற்றுக்கொள்வதற்காக செயலாளர் அல்ல தாளாளரால் பிறக்கப்படும் அனுமதி ஆணைக்கு ஒப்புதல் வழங்குதல்.

ix) நிதியுதவி தனியார் பள்ளிகளில் பணியாளர் நிர்ணயம்:

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளது பணியாளர் நிர்ணயத்திற்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளது பணியாளர் நிர்ணய கருத்துருக்களை தயாரித்து முதன்மைக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைத்தல்.

x) ஊதியம் மற்றும் இதர பணப்பலன்களை பெற்று வழங்குதல்:

மாவட்டக் கல்வி அலுவலக பணியாளர்களுக்கு ஊதியம், கடன் மற்றும் முன்பணத் தொகை ஒப்பளிப்புகள் மற்றும் பொது வைப்பு நிதி தற்காலிக மற்றும் பகுதி இறுதி எடுப்பு ஆகியவற்றுக்கு ஒப்புதல் அளித்து பெற்று வழங்குதல் மற்றும் உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் அதற்கிணையான பணியிடங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கு கடன்கள், முன் பணத் தொகை, பொது வைப்பு நிதி தற்காலிக மற்றும் பகுதி இறுதி எடுப்பு உள்ளிட்ட செயல்பாடுகளுக்கு ஒப்பளித்தல்.

நிதியுதவி பள்ளிகள்:

நிதியுதவி பள்ளிகளுக்கு மானியம் பெற்று வழங்குதல், நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு

கடன்கள், முன் தொகைகள் மற்றும் நிதி உதவி பள்ளி ஆசிரியர்களது வைப்பு நிதியிலிருந்து தற்காலிக மற்றும் பகுதி - இறுதி எடுப்பு அனுமதித்து பெற்று வழங்குதல்.

**சுயநிதி பள்ளிகள்:**

கல்வி மாவட்டத்திலுள்ள அனைத்து சுயநிதி பள்ளிகளிலும் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தால் அனைத்து ஆசிரியர்களுக்கும் மின்னணு மாற்று மூலம் ஊதியம் பெற்று வழங்கப்படுதலை உறுதி செய்தல் மற்றும் விதி மீறல்கள் ஏதேனும் இருப்பின் அந்நிர்வாகங்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல். இப்பொருள் சார்பில் வட்டாரக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்படும் விதி மீறல் சார்பிலான அறிக்கைகளின் மீது நடவடிக்கைகள் மேற்கொண்டு ஆணை பிறப்பித்தல்.

**xi) ஆண்டு மந்தன அறிக்கை:**

அரசு உயர்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் அப்பணியிடங்களுக்கு இணையாக வேறு பணிகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் மீது ஆண்டு மந்தன அறிக்கை தயாரித்தல்.

**xii) பதவி உயர்விற்க்கு தேர்ந்தோர் பட்டியல் தயாரித்தல்:**

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் பதிவறை உதவியாளர்கள், பதிவறை எழுத்தர்கள், ஆய்வக உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் இரவுக் காவலர்கள் சார்பில் பதவி உயர்விற்க்கான தேர்ந்தோர் பட்டியல் தயாரித்தல்.

**xiii) ஆசிரியர் மற்றும் ஆசிரியல்லாத பணியாளர்களை பணியிட மாறுதல்:**

கல்வி மாவட்டத்திற்குள் பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைக் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கிடையே நிர்வாக நலன் அல்லது பிறக்காரணங்களின் அடிப்படையில் பணியிட மாறுதல் மேற்கொள்ளுதல்.

**xiv) ஓய்வூதிய பலன்கள்:**

அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் அதற்கிணையான பணியிடங்களில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் பணியாளர்கள் சார்பில் ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதிய பலன்களை பெறுவதற்கான கருத்துருக்களை மாநில கணக்காயருக்கு அனுப்பிவைத்தல்.

**நிதியுதவி பள்ளிகள்:**

நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் சார்பில் பெறப்படும் ஓய்வூதிய கருத்துருக்கள் பரிசீலித்து, ஒப்பளித்தல்.

**xv) வயது முதிர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு மறுநியமன ஆணை வழங்குதல்:**

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் கல்வியாண்டு இடையில் ஓய்வு பெற நேரிட்டால், அவ்வாசிரியர்கள் கல்வியாண்டு முடிய பணியாற்றுதலுக்காக மறுநியமன ஆணையை வழங்குதல்.

**4. வரவு-செலவு திட்டம்:**

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் சார்பில் எண் பட்டியல் தயாரித்தல், உத்தேச வரவு செலவு திட்டம் தயாரித்தல், செலவின அறிக்கை சமர்ப்பித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுதல். பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் சார்பில் பெறப்படும் எண் பட்டடியல், உத்தேச வரவு-செலவு திட்ட அறிக்கைகளை தொகுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிதியுதவி தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் சார்பில் பெறப்படும் எண் பட்டியல் மற்றும் உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கைகளைதொகுத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுதல்.

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலர்

/ உண்மை நகல் /

(ஓம்) xxxxxxx
பிரிவு அலுவலர்

**வட்டாரக் கல்வி அலுவலரின் கடமைகளும், பொறுப்புகளும்:**

**1. ஆய்வு அதிகாரம்:**

அ) வட்டாரத்துக்குட்பட்ட அனைத்து வகை பள்ளிகளை பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

ஆ) மத்திய அரசு மற்றும் மாநில அரசாங்களால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி, ஆசிரியர்கள் கல்வித் தகுதிகள் மற்றும் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ல், முக்கியத்துவம் அளிக்கபட்டுள்ள மாணவர்களின் பாதுகாப்பு அம்சங்கள்உள்ளிட்டவற்றை வட்டாரத்திலுள்ள பிற பாடத்திட்டங்கள் (CBSE, ICSE, IB, AB முதலியன) கீழ் இயங்கும் பள்ளிகளில் ஆய்வு செய்தல்.

இ) சிறுபான்மை பள்ளிகள் நீங்கலாக உள்ள சுயநிதி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-ன்படி, கீழ் அனுமதிக்கப்பட்ட 25% சேர்க்கைகளை ஆய்வு செய்தல்.

ஈ) சுயநிதி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணய குழுவின்படி நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் வசூலிக்கப்படுவதை உறுதி செய்தல்.

உ) வட்டாரத்திலுள்ள மழலையர், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆண்டாய்வு மேற்கொள்ளுதல்.

ஊ) வட்டாரத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் அரசு நலத்திட்டங்கள் செயலாக்கத்தை ஆய்வு செய்தல்.

**2. பள்ளிகள் தொடங்குதல், மூடுதல் மற்றும் அங்கீகாரம் அளித்தல் உள்ளிட்ட அதிகாரங்கள்:**

**i) நிதியுதவி பள்ளிகள்:**

அ) நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் சார்பில் அங்கீகாரம் புதுப்பித்தலுக்காக பெறப்படும் விண்ணப்பங்களை உரிய குறிப்புகளுடன் மாவட்டக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைத்தல்.

ஆ) நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை மூடுதல் சார்பில் விரிவான குறிப்புகளுடன் அறிக்கை தயாரித்து மாவட்டக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைத்தல்.

**ii) சுயநிதி பள்ளிகள்:**

இ) புதிய மழலையர்- தொடக்கப் பள்ளி, தொடக்கப் பள்ளி சார்பில் முதல்முறை அங்கீகாரம் மற்றும் அங்கீகாரம் புதுப்பித்தல் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களையும், நடுநிலைப் பள்ளிகள் தரம் உயர்த்துதல் சார்பிலான கருத்துருக்களையும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு பரிந்துரைத்தல்.

ஈ) சுயநிதி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலிருந்து கூடுதல் பிரிவுகள் தொடங்குவதற்காகப் பெறப்படும் விண்ணப்பங்களை விதிகளின்படி ஆய்வு செய்து மாவட்டக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைத்து அனுப்புதல்.

உ) பொது மக்கள் நலன்கருதி மூடப்பட வேண்டிய சுயநிதி பள்ளிகள் ஏதேனும் இருப்பின் அறிக்கையை தயாரித்து மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பிவைத்தல்.

ஊ) வட்டாரத்திலுள்ள அனைத்து பள்ளிகளும் உரிய அங்கீகாரத்துடன் செயல்படுதலை உறுதி செய்தல்.

3. பணி சார்பிலானவை:

i) ஒழுங்கு நடவடிக்கைகள்:

தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் முன்-தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு எதிராக குற்றங்கள் அடிப்படையில் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1973-க்குட்பட்ட விதிகள் 17 (அ) மற்றும் 17 (ஆ) கீழ் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் இறுதி ஆணைகளை பிறப்பித்தல்.

ii) பணிப்பதிவேடு:

பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், முன்-தொழிற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளிட்டவர்களுக்கு பணிப்பதிவேடு தொடங்கி பராமரித்தல்.

நிதியுதவி பள்ளிகள்:

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பராமரிக்கப்படும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களது பணிப்பதிவேடுகளில் பதிவு செய்யப்படும் பணி விபரங்களுக்கு மேலொப்பம் இடுதல்.

iii) தேர்வுநிலை / சிறப்புநிலை அளித்தமைக்கு ஒப்புதல் வழங்கல்:

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு செயலாளர் / தாளாளரால் அனுமதிக்கப்படும் தேர்வுநிலை / சிறப்புநிலை ஆணைக்கு ஒப்புதல் வழங்குதல்.

iv) விடுப்பு அனுமதித்தல்:

வட்டாரக் கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள், பஞ்சாயத்து யூனியன் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்கு உரிய விடுப்பு அனுமதி ஆணை வழங்குதல்.

**நிதியுதவி பள்ளிகள்:**

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு செயலாளர் /-தாளாளரால் அனுமதிக்கப்படும் விடுப்பிற்கு ஒப்புதல் வழங்குதல்.

**v) கூடுதல் கல்வித் தகுதிகளை பெற முன் அனுமதிக்கு ஒப்புதல் வழங்குதல்:**

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் சார்பில் கூடுதல் கல்வித் தகுதியை பெற செயலாளர் அல்லது தாளாளரால் அளிக்கப்பட்ட அனுமதி ஆணைக்கு ஒப்புதல் வழங்குதல்.

**vi) பணியாளர் நிர்ணயம்:**

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாளர் நிர்ணயம் சார்பிலான கருத்துருக்களை தயாரித்து மாவட்டக் கல்வி அலுவலருக்கு சமர்ப்பித்தல்.

**vii) ஊதியம் மற்றும் இதர பணப்பலன்களை பெற்று வழங்குதல்:**

பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஊதியம், கடன்கள், முன்பணங்கள் மற்றும் பொது வைப்பு நிதி தற்காலிக முன்பணம், பகுதி-இறுதி எடுப்பு போன்றவற்றின் சார்பில் ஒப்பளிப்பு ஆணை வழங்கி, அவற்றை பெற்று வழங்குதல்.

**நிதியுதவி பள்ளிகள்:**

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு மானியம் பெற்று வழங்குதல் மற்றும் அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு கடன்கள், முன்பணங்கள் மற்றும் நிதியுதவி பள்ளி ஆசிரியர்கள் வைப்பு நிதியிலிருந்து தற்காலிக முன்பணம், பகுதி இறுதி எடுப்பு ஆகியவற்றை ஒப்பளிப்பு செய்து பெற்று வழங்குதல்.

**சுயநிதி பள்ளிகள்:**

வட்டாரத்தில் உள்ள அனைத்து சுயநிதி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பள்ளி நிர்வாகம் மின்னணு மாற்று முறையின் கீழ் மாத ஊதியத் பெற்று வழங்குதலை உறுதி செய்தல், விதி மீறல்கள் இருப்பின் அது சம்பந்தமாக மாவட்டக் கல்வி அலுவலருக்கு புகார் அளித்தல்.

**viii) ஓய்வூதிய பலன்கள்:**

பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் சார்பில் ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதிய பலன்கள் சம்பந்தமான கருத்துருக்களை மாநில கணக்காயருக்கு அனுப்பி வைத்தல்.

**நிதியுதவி பள்ளிகள்:**

நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளது தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஓய்வூதிய பலன்களை ஒப்பளித்தல்.

ix) வயது முதிர்வு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு மறுநியமன ஆணை வழங்குதல்:

கல்வியாண்டில் மத்தியில் ஓய்வு பெறும் பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வியாண்டு முடிய பணிபுரியும் வகையில் மறுநியமன ஆணையை பிறப்பித்தல்.

4. வரவு - செலவு திட்டம்:

பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் நிதியுதவி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் சார்பில், எண் பட்டியல், உத்தேச வரவு-செலவுத் திட்டம் தயாரித்தல், செலவின அறிக்கை சமர்ப்பித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுதல்.

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலர்

/ உண்மை நகல் /

(ஒம்) xxxxxxx
பிரிவு அலுவலர்